மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வழக்குகள் கூடியிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதனால் வழக்குரைஞர்கள் கூடியிருக்கிறார்கள். மேலும் வழக்குகள் கூடி வேண்டிய பெண் வழக்குரைஞர்களை நியமிக்க வேண்டும் என்ற கருத்து அரசாங்கத்திற்கு இல்லை.

பணியின் போது இயற்கையெய்தும் அரசு ஊழியர்கள்

* 250 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) என்.ஜி.ஓக்கள் காலமானால் அவர்கள் உடலை குடும்பத்தார் விரும்பும் ஊருக்கு அரசாங்க செலவிலேயே அனுப்ப அரசு உத்தரவிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) பணியிலிருக்கும் அரசு ஊழியர் காலமானால் அவரது உடலை அவரது குடும்பத்தார் விருப்பப்படி அவர் வசித்த இடத்திற்கோ, இடுகாட்டிற்கோ அல்லது சொந்த ஊருக்கோ அரசு செலவில் எடுத்துச் செல்லவும், இதற்காக அரசு வாகனங்களைப் பயன்படுத்தவும், அரசு வாகனங்கள் கிடைக்காத நேரத்தில், அரசு செலவில் வாடகை வண்டி அமர்த்திக் கொள்ளவும் ஆணையிடப் பட்டுள்ளது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இதன்படி 1972-73-ம் ஆண்டில் எவ்வளவு நபர்களுக்கு இப்படிப்பட்ட உதவி செய்யப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நல்லவேளையாக இது வரையில் அத்தகைய உதவி ஒன்றும் செய்வதற்கு ஏற்ற வாய்ப்பு வரவில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சில நேரங்களில் பயணிகள் வெளியூர் சென்றிருக்கும்போது அகால மரணம் அடைந்து

1973 மார்ச் 5]

விடுகிறார்கள். அவர்களது சடலங்களை சொந்த ஊருக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. இதற்காக மாவட்டந்தோறும் பயணிகள் விடுதிகளில் அரசாங்க வான்களை, சவங்களை எடுத்துச் செல்வதற்குத் தகுதியான வான்களை தயாராக வைத்திருக்கும் முறை ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தக் கேள்வி அரசாங்கச் சிப்பந்திகள் பற்றியது. அவர்களது பணிக் காலத்தில் அவர்கள் இறந்து விடுவார்களேயானால் அந்தச் சவத்தை எடுத்துச் செல்வதற்கு அவர்கள் குடும்பத்தினர் மிகவும் கஷ்டப்படவேண்டியிருக்கிறது என்ற காரணத்தினால் அரசாங்கம் தனது சொந்தச் செலவில் அந்தச் சவத்தை குடும்பத்தாரிடத்தில் கொண்டுபோய் கொடுக்கவேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் எடுக்கப் பட்டது. மற்றபடி மற்றயிடங்களில் உறுப்பினர்கள் அவர்கள் கூறியபடி நிலைமைகள் இருக்குமானால் அதை மக்கள் நல்வாழ்வுத் துறை கவனிக்கவேண்டியிருக்கும், போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்டதல்ல.

திரு. கே. கந்தசாமி : அரசு ஊழியர்கள் உத்தியோகம் பார்க்கிறபோது இறந்துவிட்டால் எடுத்துச் செல்வதற்கான வசதி பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போலீஸ் டிப்பார்ட் மென்டைப் பொறுத்தவரையில் எனக்குத் தெரிந்தவரையில், இறந்தவரை எடுத்துச் செல்வது மாத்திரமல்லாமல் அவர்களது இறுதிச் சடங்குக்கு செலவு செய்வதற்கும் ஏறக்குறைய ரூ. 200, ரூ. 300 என்ற அளவிற்கு அந்த டிபார்ட்மென்ட் மூலம் அரசு உதவுகிறது. அதேபோல் ஏனைய அரசு ஊழியர்களுக்கும் அப்படி இலவச இறுதிச் சடங்குச் செலவிற்கு அரசாங்கமே கொடுத்து உதவுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தக் கேள்வி போக்குவரத்துத் துறையில் இருந்து—உடலைக் கொண்டுபோய் கொடுப்பதற்கு போக்குவரத்துத் துறையில் இந்தச் செலவை ஈடு கட்டிக் கொள்கிறோம். இதர துறைகளில் என்னென்ன செய் கிறார்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

[1973 மார்ச் 5

மணிமுத்தார் நீர்த்தேக்கத்திலிருந்து கார் பயிருக்கு நீர் வழங்கல்

* 244 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-ம் வருடம், ஏப்ரல் மாதம் அட்வான்ஸ் கார் பயிருக்கு மணிமுத்தார் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப் பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 131 மில்லியன் கனஅடி தண்ணீரும், மே மாதம் 248 மில்லியன் கனஅடித் தண்ணீரும் அட்வான்ஸ் கார் பயிருக்காக மணிமுத்தார் நீர்த் தேக்கத்திலிருந்து விடப்பட்டது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : 1972-ம் ஆண்டு சென்ற கார் போகத்தில் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விட்டதன் காரணமாக மேற்கத்திய பாசனமாகிய பெருங்கால், கன்னடியன்கால் பாசனங்கள் எல்லாம், அந்தப் பாசனங்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் அங்குள்ள விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இந்த ஆண்டும் இந்தமாதிரி நிலை ஏற்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அட்வான்ஸ் கார் பயிருக்கு ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என்ற அனுமதி கொடுத்திருந்தது. அந்த அளவு தண்ணீர் தேவை இல்லை என்றும், 379 மில்லியன் கன அடி அட்வான்ஸ் கார்க்கு விடப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் எந்தவிதமான குற்றச்சாட்டும், புகாரும் வரவில்லை.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மணிமுத்தார் அணையில் ஐம்பது அடி தண்ணீர் ரிசர்வ் எப்போதும் இருக்க வேண்டு மென்று அரசாங்க ஜீ.ஓ. ஏதாவது உள்ளதா? அதன்படி கடைப் பிடிக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

1973 மார்ச் 5]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஜீ.ஓ.க்கள் எல்லாம் பரிசீலித்துத்தான் அந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

மதுரையிலுள்ள வக்பு போர்டு கல்லூரி

* 245 **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் நடைபெறும் வக்பு கல்லூரி எந்த ஆண்டு துவக்கப்பட்டது?

(இ) இக்கல்லூரி சென்னை பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மதுரையில் நடைபெறும் வக்பு கல்லூரி 25—7—1968 முதல் துவக்கப் பட்டது.

(இ) இக்கல்லூரி மதுரைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : மதுரையில் நடைபெறும் இந்த வக்ப் கல்லூரி போதிய இடவசதியில்லாமல், கட்டட வசதியில்லாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதை விரிவுபடுத்தி மேலும் நல்லமுறையில் அமைக்க அரசாங்கம் அதிகத் தொகை ஒதுக்கி உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது அரசாங்கக் கல்லூரி அல்ல, வக்ப் போர்ட் கல்லூரி. இடவசதி இருக்கிறது. தமிழ்நாடு அரசு சுமார் இருபது ஏக்கர் நிலம் கொடுத்திருக் கிறார்கள். கட்டடம் கட்ட நன்கொடை எதிர்பார்க்கிறார்கள். உறுப்பினர்களைப் போன்றவர்கள் நன்கொடை வசூல் செய்து கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். பாங்க் ஆஃப் மதுரை மூலம் ஐந்து லட்சம் ரூபாய் பெற்று மாணவர்கள் தங்கும் விடுதி கட்ட நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

[1973 மார்ச் 5

புலவர் சி. பழனிச்சாமி : இந்த வக்ப் போர்ட் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்களுக்கு ஊதியம் மாதாமாதம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்ற புகார்கள் வந்துள்ளனவா? இப்போது அது சரி செய்யப்பட்டுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு தவறான பிரசாரம் செய்து வருகிறார்கள். திரு. வகாப் அவர்கள் கேட்டுள்ள கேள்விக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது, 1—7—1972 முடிய சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கல்லூரிபற்றி அதன் மீது ஏதாவது சொல்ல வேண்டுமென்ற முறையில் இதுபோன்ற ஒரு பிரசாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த வக்ப் போர்ட் நடத்தும் கல்லூரியில் எவ்வளவு முஸ்லிம் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும், எவ்வளவு இந்துக்கள் எடுக்கப்படவேண்டும் என்று ஏதாவது விகிதாசாரம் வைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது ப்ரையாரிட்டி ஃபார் முஸ்லீம் அப்ளிகேஷன்ஸ், பின்பு இந்துக்களை எடுக்கவேண்டுமென்று ஏதாவது பாதுகாப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விகிதாசாரம் கொடுக்கப்படவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் 25 சதவிகிதம் கூட முஸ்லீம் மாணவர்கள் இல்லை.

திரு. நா. வீராசாமி : மதுரையில் உள்ள இந்தக் கல்லூரியில் படிக்கிற மாணவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வெளியே வந்தவுடன் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு இந்த வக்ப் போர்டிலிருந்து ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது ஒரு நல்ல கேள்விதான். ஆனால் அந்த போர்ட் மூலம் வருகிற வருமானம் அதன் செலவிற்கே தற்போது போதாமல் இருக்கிறது. அதன் சொத்துக்கள் மீது நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். அவை நல்லமுறையில் முடியுமானால் உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் நடவடிக்கைகள் எடுக்க இயலும்.